www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரையாண்டுத் தேர்வு – 2023

**10 - ஆம் வகுப்பு**

## தமிழ்

காலம் : 3.15 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி – I ( மதிப்பெண்கள் : 15 )

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்________ அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) கொண்டல் - 1. மேற்கு
   ஆ) கோடை - 2. தெற்கு
   இ) வாடை - 3. கிழக்கு
   ஈ) தென்றல் - 4. வடக்கு
   அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2
3. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ________
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
4. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க....
   அ) உழவு,மண்,ஏர்,மாடு ஆ) மண்,மாடு,ஏர்,உழவு
   இ) ஏர்,உழவு,மாடு,மண் ஈ) உழவு,ஏர்,மண்,மாடு
5. மொழிஞாயிறு என்றழைக்கப்படுபவர்________
   அ) அப்பாத்துரையார் ஆ) இளங்குமரனார் இ) பாவாணர் ஈ) திரு.வி.க
6. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்________
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
7. குறிப்பு விடைகளின் எண்ணிக்கை
   அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6
8. "வெள்ளை சட்டை வந்தார்" – இத்தொகையின் வகை யாது? அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
9. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது? அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல் இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
10. "உனதருளே பார்ப்பன் அடியேனே" – யார் யாரிடம் கூறியது?
    அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
    இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
11. புறத்திணை ______ வகைப்படும்
    அ) 10 ஆ) 11 இ) 12 ஈ) 13

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க:-

கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கி

12. இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல்.
    அ) நீதிவெண்பா ஆ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) மணிமேகலை
13. இப்பாடலின் ஆசிரியர் ________
    அ) சாத்தனார் ஆ) கம்பர் இ) இளங்கோவடிகள் ஈ) நக்கீரர்
14. 'கிழி' என்பதன் பொருள்
    அ) பறவை ஆ) பயம் இ) கல் ஈ) துணி
15. நன்கலம் – பிரித்து எழுதுக
    அ) நன் + கலம் ஆ) நன்மை + கலம் இ) நல் + கலம் ஈ) நல்ல + கலம்

### பகுதி – II ( மதிப்பெண்கள் : 18 ) பிரிவு – I

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8

21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைக்கேற்ற வினா அமைக்க. அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
    ஆ. 1956ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
17. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
18. வசனகவிதை – குறிப்பு வரைக
19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned by CamScanner

20. பாசவர்,வாசவர்,பல்நிண விலைஞர்,உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21. விடல் – என முடியும் குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. தண்ணீர் குடி,தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க..

23. உரைத்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.

"காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" "இந்த வழியாகச் செல்லுங்கள்."– என்று விடையளிப்பது.

25. உரிய தமிழெண்களால் நிரப்புக.

அ. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் ______

ஆ. நீ பிறந்த ஆண்டு______

26. கொடுக்கப்பட்ட இரு சொற்களையும் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :

மலை – மாலை

27. கலைச்சொல் தருக:- அ. Emblem ஆ). Biotechnology

குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

கூட்டப்பெயர்களை எழுதுக :- அ) கல் ஆ) பழம்

28. பின் வரும் தொடரில் உள்ள பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. நான் இந்த ஸ்கூலின் ஓல்டு ஸ்டூடண்ட்

பகுதி – III ( மதிப்பெண்கள் -18 ) பிரிவு – I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

தமிழர்,போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.போரின் கொடுமையிலிருந்து பசு,பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?

ஆ) ஆவூர் மூழங்கிழாரின் போர் அறம் குறித்து குறிப்பிடுவது யாது?

இ) யாருக்கெல்லாம் தீங்கு வராத வண்ணம் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

30. ' புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது 'இது போல் இளம் பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

31. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்.' – இடம் சுட்டிப் பொருள் விளக்குக

பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. " மாளாத காதல் நோயாளன் போல் " என்னும் தொடரிலுள்ள உள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

34. " அன்னைமொழியே " எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக (அல்லது )

" நவமணி " எனத் தொடங்கி 'அழுவ போன்றே ' என முடியும் பாடலை எழுதுக.

பிரிவு -III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

35. பின்வரும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.

இன்மையின் இன்னா தியாதெனின் இன்மையின்

இன்மையே இன்னா தது

36. தீவக அணி என்றால் என்ன?

37. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக

பகுதி -IV ( மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 × 5 = 25


38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. ( அல்லது )ஆ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?



www.Padasalai.Net
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned by CamScanner

39. மாநில அளவில் நடைபெற்ற " மரம் இயற்கையின் வரம் " எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. ( அல்லது ) ஆ. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக..



41. பிரேம் தன் தந்தை குமாரசாமி அவர்களிடம் நூலகத்தில் உள்ள உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் பிரேமிடம் ரூ 50ம், 5, விவேகானந்தர் தெரு, கோரிபாளையம், மதுரை மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்கு சென்ற பிரேமாக தேர்வர் தன்னைக் கருதி கொடுக்கப்பட்ட உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) தொகைச்சொற்களைப் பிரித்து எழுதி,தமிழ் எண்ணுரு தருக

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவருக்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகிறது. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:- *Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.*

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு

---

## நூலக உறுப்பினர் படிவம்

____________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ____________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி / அலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :

நான் ____________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ______ சந்தா தொகை ரூ. ______ ஆக மொத்தம் ரூ. ______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

இடம் :

நாள் :

திரு / திருமதி / செல்வன்/ செல்வி ____________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்

பிணைப்பாளர் கையொப்பம்

(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி / நகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

அலுவலக முத்திரை



www.Padasalai.Net
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாக ஆற்றல் மிகுந்து செறிந்து நின்று இப்படியாக ( வெள்ளத்தில் மூழ்குதல் ) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் தோன்றுவதற்கு ஏற்ற சூழ்நிலை உண்டாகி தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் வளர்ந்த கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி – V ( மதிப்பெண்கள் : 24 )

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. ( அல்லது )

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு . குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் " மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் " என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் ' கோபல்லபுரத்து மக்கள் ' கதைப் பகுதி கொண்டு விளக்குக ( அல்லது )

ஆ. அழகிரிசாமியின் ' ஒருவன் இருக்கிறான் ' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு " சான்றோர் வளர்த்த தமிழ் " என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. குறிப்புகள்: முன்னுரை – தமிழன்னையின் அணிகலன்கள் – தமிழ்ச்சான்றோர் தமிழின் வளர்ச்சி – தமிழின் எதிர்காலம் – முடிவுரை ( அல்லது )

ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரை எழுதுக.
குறிப்புகள் : முன்னுரை – பொருட்காட்சி நுழைவுக்கட்டணம் துறை சார்ந்த அரங்குகள் – பொழுதுபோக்கு – பல்துறை அங்காடிகள் – பொருட்காட்சியால் விளையும் நன்மைகள் – முடிவுரை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com Scanned by CamScanner

அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் 2023

பத்தாம் வகுப்பு - தமிழ் தஞ்சாவூர் மாவட்டம்

விடைக்குறிப்பு

1) இ) எம்+ தமிழ்+ நா

2) ஆ) 3,1,4,2

3) ஈ) சிலப்பதிகாரம்

4) ஈ) உழவு, ஏர், மண், மாடு

5) இ) பாவாணர்

6) அ) அகவற்பா

7) இ)5

8) இ) அன்மொழித்தொகை

9) அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்

10) ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

11) இ) 12

12) ஆ) சிலப்பதிகாரம்

13) இ) இளங்கோவடிகள்

14) ஈ) துணி

15) ஆ) நன்மை+ கலம்

16) அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களிடம் அமைந்திருப்பது எது ?

ஆ. எந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது ?

17) ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல்

18) உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வசன கவிதை.

www.Padasalai.Net

19) வாருங்கள், அமருங்கள், நீர் அருந்துங்கள், உணவு உண்ணுங்கள்

20) பாசவர் - வெற்றிலை விற்பவர் .

வாசவர் - ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள்கள் விற்பவர் .

பல்நிண விலைஞர் - பலவகையான இறைச்சி விற்பவர்

உமணர் - வெண்மையான உப்பு விற்பவர் .

21) பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்.

22) தண்ணீரைக் குடி - தாகம் தாங்கமுடியாமல் தண்ணீரைக் குடித்தான்

தயிர்க்குடம் - தயிரை உடைய குடத்துடன் வந்தாள்.

23) உரைத்த - உரை + த்+த் + அ -

உரை - பகுதி, த் - சந்தி, த்- இறந்தகால இடைநிலை , அ- பெயரெச்ச விகுதி

24) ஐயவினா, சுட்டு விடை

25) அ. ௪அஅ

ஆ. ௨ 00 ௬

26) மாலையில் மலை அழகு.

27) அ.சின்னம். ஆ. உயிரித் தொழில் நுட்பம்.

28) நான் இந்தப் பள்ளியின் பழைய மாணவன்.

29) அ. வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமை

ஆ. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்யக்கூடாது என்கிறார்.

இ. பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர்

30) 1. வயலில் நெல் நாற்று நட்டேன் .

2. வயலில் மாங்கன்று வாங்கி நட்டேன் .

www.Padasalai.Net

3. தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன்.

4. காட்டில் பனை மடலியைப் பார்த்தேன் .

31) இடம் : சிற்றகல் ஒளி " என்னும் மா . பொ. சிவஞானத்தின் 'எனது போராட்டம் ' தன்வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ளது. .

பொருள் :

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னை தான் அதன் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று அதன் தலைவர்கள் கருதினர் . அதனை எதிர்த்து மாநகராட்சி சிறப்புக் கூட்டம் செங்கல்வராயன் தலைமையில் கூட்டி , சென்னை பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து , ம .பொ.சி . முழங்கிய முழக்கமாகும் .

விளக்கம் :

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திர மாநிலம் பிரியும்போது , சென்னை தான் அதன் தலைநகராக இருக்க வேண்டுமென ஆந்திர தலைவர்கள் கருதினர் . இதனை எதிர்த்து மாநகராட்சி சிறப்பு கூட்டம் ஒன்றை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி , " தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் " என்ற முழக்கத்தை ம. பொ .சி . முன்மொழிந்தார் .

32) அன்னை மொழியே! அழகான செந்தமிழே ! முன்னைக்கும் முன்னையான நறுங்கனியே ! கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசே ! பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெருமைக்குரியவளே ! பத்துப்பாட்டே ! எட்டுத்தொகையே ! பதினெண் கீழ்க்கணக்கே ! நிலைத்த சிலப்பதிகாரமே ! நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார்

33 ) மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். இதுபோன்ற இறைவன் தன். விளையாட்டால் நீங்காத துன்பம் தந்தாலும் அடியவர் எப்போதும் அவரை விட்டு நீங்கார்.

34 ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!

முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! ........

35) இன்மையின் - நேர் , நேர், நேர். - தேமாங்காய்

இன்னா - நேர், நேர் - தேமா

www.Padasalai.Net

தியாதெனின் - நிரை, நிரை - கருவிளம்

இன்மையின் - நேர், நேர், நேர். - தேமாங்காய்

இன்மையே - நேர், நேர், நேர். - தேமாங்காய்

இன்னா. - நேர், நேர், . - தேமா

தது - நிரை - மலர்.

36) தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓர் அறையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது, அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒருசொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருள் விளக்குவது தீவக அணி.

37) ஈற்றடி மூன்றுசீராய் ஏனைய அடிகள் நான்கு சீராய் வரும்.

செப்பலோசை பெற்று வரும்.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை வரும்.

ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு கொண்டு முடியும்.

38) அ. மேகம் அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மாவலி மன்னன் திருமாலுக்கு நீர்வார்த்துத் தரும்பொழுது மண்ணுக்கும், விண்ணுக்கும் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மழை மேகம் ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு வலமாய் எழுகிறது. மலையைச் சூழந்து விரைந்து வேகத்துடன் பெரு மழையைப் பொழிகிறது.

தெய்வ வழிபாடு:

முதுபெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி ஆரவாரிக்கும். மலர்ந்த முல்லைப் பூவோடு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவி வழிபடுவர். தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

கன்றின் வருத்தம்:

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.

வருந்தாதே :

www.Padasalai.Net

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவார் வருந்தாதே' என்றாள் இடைமகள்.

முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திறைப் பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே

ஆ)

பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

நன்னனின் கூத்தர்கள் :

பகைவரே இல்லாமல் ஆட்சிசெய்பவன், பகை வந்தாலும் எதிர்கொள்ளும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள். நீங்கள் உரிமையுடன் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்களும் உங்களிடம், உறவினர் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள். நெய்யில் வெந்த மாமிசம், தினைச் சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

39) பொருத்தமான கடிதம் இருப்பின் மதிப்பெண்

40) பொருத்தமான கருத்தைக் கவினுற எழுதியிருப்பின் மதிப்பெண்

41) மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு

அட்டை எண் : 0087 உறுப்பினர் எண் : 112114

1. பெயர் : கு. பிரேம்

2. தந்தை பெயர் : குமாரசாமி

3. பிறந்த தேதி : 16-03-2008

4. வயது : 14

5. படிப்பு : பத்தாம் வகுப்பு

6. தொலைபேசி எண் : 9443740120

7. முகவரி. : 2,விவேகானந்தர் தெரு, கோரிபாளையம், மதுரை

காப்புத்தொகை :25, சந்தா தொகை 25, மொத்தம் :50

www.Padasalai.Net

தங்கள் உண்மையுள்ள,

பிரேம்.

42) மூன்று+ வேந்தர் - ௩ நான்கு+ திசை - ௪. மூன்று+ தமிழ். இரண்டு + திணை - ௨. ஐந்து + திணை - ௫. நான்கு + நிலம் - ௪. ஆறு + சுவை - ௬. பத்து + பாட்டு - க0. எட்டு + தொகை - அ

43) அ

முன்னுரை

தமிழ் மொழி வேறு மொழிகளுக்கு இடையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது . சொல்வளம் , இலக்கிய செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேணும் , தமிழ் மட்டும் அதில் தலை சிறந்ததாகும் .

பயிர் வகைச் சொற்கள் :

தமிழ்ச்சொல் வளத்தைப் பல வழிகளில் காணலாம் . பயிர் வகை சொற்கள் மட்டுமே சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகிறது .

அடிவகை :

தாவரத்தின் அடிப்பகுதியை குறிப்பதற்கான சொற்கள் - தாள் , தண்டு , கோல் , தூறு, தட்டு ,கழி , கழை, அடி என பல சொற்களில் தமிழர்கள் வழங்குகின்றார்கள் .

காய்ந்த அடியும் கிளையும் :

சுள்ளி, விறகு ,வெங்கழி , கட்டை

இலை வகை :

இலை , தாள் , தோகை , ஓலை , சண்டு , சருகு

கொழுந்து வகை :

தாவரத்தின் நுனிப்பகுதியை குறிக்கும் சொற்கள்: துளிர் அல்லது தளிர், முறி அல்லது கொழுந்து ,குருத்து , கொழுந்தாடை. என பல சொற்களை தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் .

பூவின் நிலைகள் அரும்பு , போது , மலர் , வீ , செம்மல்

பிஞ்சு வகை குறிக்கும் சொற்கள் : பூம்பிஞ்சு , பிஞ்சு , வடு , மாசு, இவ்வகை, கரும்பு , முட்டுக் குரும்பை , இளநீர் , குழாய், கருக்கல், கச்சல் .

குலை வகை குறிக்கும் சொற்கள் : கொத்து , குலை , தாறு , கதிர் , அலகு அல்லது குரல் , சீப்பு

www.Padasalai.Net

பழத்தோல் வகை குறிக்கும் சொற்கள் :

தொலி , தோல் , தோடு , ஓடு , குடுக்கை , மட்டை , உமி , கொம்மை என்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர் .

மணி வகை குறிக்கும் சொற்கள் : கூலம் , பயிறு , கடலை , விதை , காழ் , முத்து , கொட்டை , தேங்காய் , முதிரை முதலியவை வழங்கும் சொற்களாகும் .

முடிவுரை

இதன் மூலம் தமிழ் சொல் வளமுடையது என்றும் தமிழ்நாடு பொருள் வளம் உடையது என்றும் தெளிவாக விளங்கும் . ஒரு நாட்டின் சொல் வளத்திற்கு தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறவொழுக்கங்களும் அமைந்திருக்கும் . பொருளைக் கூர்ந்து நோக்கி முன் பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும் .

44) சிறுகதையின் கருப்பொருள் குன்றாமல் எழுதியிருப்பின் மதிப்பெண்

45) சான்றோர் வளர்த்த தமிழ் - முன்னுரை, தமிழ் வளர்த்த சான்றோர்கள், தமிழின் வளர்ச்சி, தமிழின் வளங்கள், முடிவுரை.

தயாரிப்பு :

சே. ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர்

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்

தொடர்புக்கு : 9443740120.

www.Padasalai.Net